**<u>(சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>**

**ஓ.எஸ்.எண். 122/2018** **நாள்.09.03.2022**

2022 ம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசந்திரன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சடையக்கவுண்டர் | சாதி | |
| கிராமம் | மேல்மலையனூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 70 |

**<u>வ.சா.1</u>**

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் பாட்டனார் பட்டணகவுண்டர் இருக்கும்போதே பூர்வீக சொத்துக்கள் கூர்சீட்டு மூலம் பாகம் பிரித்து எழுதப்பட்டது என்றால்சரியல்ல. அவர் இறந்த பின்பு தான் கூர் சீட்டு எழுதப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பட்டணகவுண்டர் உயிரோடு இருக்கும் போதே கூர் சீட்டு எழுதப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 19.07.1992 தேதியிட்ட கூர் சீட்டு தான் கண்ணி கவுண்டர், சடையகவுண்டர், ரங்கசாமி கவுண்டர் ஆகியோர்கிடையே எங்கள் குடும்பத்தில் எழுதப்பட்ட கடைசி கூர் சீட்டு ஆகும். மேற்படி கூர் சீட்டின் படி கண்ணி கவுண்டர் வாரிசுகள், சடையகவுண்டர் வாரிசுகள், ரங்கசாமி கவுண்டர் வாரிசுகள் அவர் அவர்களுக்கு விட்ட பாகத்தை அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். 1992 ல் கூர் எழுதுவதற்கு முன்பு வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவம் செய்துவந்தன் அடிப்படையில் தான் 1992 ல் கூர் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. 1991 ல் சிவலிங்கத்திற்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்து என் தந்தை கிரையம் ஆக வாங்கியது. சிவலிங்கத்திற்கு கிரைய கொடுத்த சொத்து எனக்கு வாய்மொழி பாகமாக கிடைத்த சொத்து என்றால் சரியல்ல. அது என் தந்தை கிரையம் பெற்ற சொத்தாகும். என்னுடைய வழக்குரையில் என் தகப்பனாருக்கு தனிப்பட்ட கிரைய சொத்து இருந்தது என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அது தேவையில்லாததால் குறிப்பிடவில்லை. என் தகப்பனார் அவர் பெயரில் தனிப்பட்ட கிரையம் பெறுவதற்கு யார் பணம் கொடுத்தார்கள், யாரிடம் இருந்து வாங்கினார் என்ற விவரங்கள் நேரடியாக தெரியாது என்றால் அது சரியல்ல. எனக்கு நேரடியாக தெரியும். காசி கவுண்டர், சாமிகண்ணு கவுண்டர், ரங்கநாத கவுண்டர், ராமசாமி கவுண்டர் ஆகியோரிடம் இருந்த என் தந்தை கிரையம் பெற்றார். மேற்படி சொத்தை என் தந்தை கிரையம் பெறும் போது கண்ணி கவுண்டர்

வெளியூரில் இருந்தார். மேற்படி சொத்தை என் தந்தை கிரையம் பெறும் போது என் பாட்டனார் பட்டணகவுண்டர் உயிருடன் இல்லை. என் பாட்டனார் எப்போது இறந்தார் என்ற தேதி எனக்கு ஞாபகம் இல்லை. என் தகப்பனார் தான் குடும்பத்தின் மூத்தவர் என்ற அடிப்படையில் குடும்ப நிர்வாகத்தை கவனித்தார் என்றால் சரிதான். குடும்பத்தின் மூத்தவர் பெயரில் கிரையம் வாங்கினால் அவரின் சகோதரர்களுக்கு சொத்துக்களை பிரித்துக்கொடுப்பார் என்பதாலே குடும்பத்தின் மூத்தவர் பெயரில் கிரையம் வாங்குவார்கள் என்றால் சரியல்ல. கண்ணி கவுண்டர் வெளியூரில் இருந்து சம்பாதித்து வந்த பணத்தை என் தகப்பனார் பெயருக்கு மணிஆடர் மூலம் அனுப்புவார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கண்ணிகவுண்டர் அனுப்பிய பணத்தை கொண்டு தான் நான் சிவலிங்கத்திற்கு கிரைய கொடுத்த சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. நான் சிவலிங்கத்திற்கு கிரையம் கொடுத்த சொத்து என்னுடைய தனிப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல. 04.03.1993 ல் சடையகவுண்டருக்கு பாகமாக வந்த சொத்தினை 1ம் பிரதிவாதிக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. மேற்படி கிரைய ஒப்பந்தை நான் தான் எழுதிக்கொடுத்தேன் என்றாலும், வழக்கிற்காக தற்போது எழுதிக்கொடுக்கவில்லை என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் 1ம் பிரதிவாதியின் ஒரு பாக பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டார்கள். மேற்படி பாக பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்ட சொத்தை தான் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிரைய பத்திரம் எழுதினால் அதிக செலவுயாகும் என்பதால் பாக பிரிவினை பத்திரமாக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்புக்காக என் தகப்பனாருக்கு மனை எழுதிவைத்துவிட்டு கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை 1ம் பிரதிவாதிக்கு பாகமாக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. 1995 ல் எழுதப்பட்ட பாக பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் தான் அனுபவம் செய்து வருகிறார். என் மகன் பெயர் பட்டுசாமி. என் மகன் பட்டா சாமியிடம் 1ம் பிரதிவாதி ரூபாய் 3 லட்சம் கடன் வாங்கினார். அதை திருப்பி கொடுத்துவிட்டார். மேற்படி கடனிற்காக போகிய பத்திரம் எழுதப்பட்டது என்றால்சரியல்ல. மேற்படி போகிய பத்திரத்தில் 2ம் வாதி அண்ணாமலை சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கடன் கொடுக்கும் போது ஒரு புரோநோட்டு என் மகன் எழுதிவாங்கினார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை தற்போது 1ம் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் தான் அடங்கல், கணினி பட்டா உள்ளது என்றால் சரிதான். உரிய ஆவணங்கள் ் இருந்ததால் தான் 1ம் பிரதிவாதி பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதை ஆட்சேபனை செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனக்கும்

தாசில்தாருக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை. என் தகப்பனார் 2005 ஆம் ஆண்டு இறந்தார். என் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை சொத்து சம்பந்தமாக பிரச்சனை எதுவும் இல்லை. 2 ம் வாதி 40 வருடங்களாக தென்பாலை கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தகப்பனார் இறந்த பிறகு 1ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை அனுபவத்து வருவதால் வழக்குசொத்துக்களை அபகரிக்க வேண்டிய வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமான தனிப்பட்ட சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றாலும், பூர்வீக சொத்து அல்ல என்றாலும்,சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொல்லி தான் 3 ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினார்கள். வழக்கு சொத்து சம்பந்தமாக மேற்கொண்டு ஆவணங்கள் எதுவும் பதிவு செய்ய கூடாது என்று அறிவிப்பு அனுப்பினேன். மேலும், மேற்கொண்டு ஆவணங்கள் பதிவு செய்தால் வழக்கில் உங்களையும் தரப்பினராக சேர்ப்பேன் என்று சொல்லியுள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 3 ம் பிரதிவாதி ஆவணங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை. 3 ம் பிரதிவாதி நான் அறிவிப்பு அனுப்பிய பிறகு ஆவணங்கள் எதுவும் பதிவு செய்யாததால் வழக்கில் 3 ம் பிரதிவாதியை தரப்பினாராக சேர்த்தது தவறு என்றாலும், அதனால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல..